**Most Rev. Dr. A. Anandarayar, D.D., D.C.L.,**
Archbishop of Pondicherry and Cuddalore

Archbishop's House, Post Box No – 193, 206, Cathedral Street, Pondicherry 605 001, INDIA.

அருள்பணி அன்பின் மூலமாக இந்த அருளை எளிதாகப் பெறுவதற்கு உதவும் வகையில், அனைத்து அருள்பணியாளர்களும் மனத்தாராளத்தோடு தகுந்த தயாரிப்புடன் கூடிய ஒப்புரவு அருளடையாளத்தை நிறைவேற்றி, நோயாளிகளுக்கு நற்கருணை வழங்கவேண்டும் என மனதார இத்திருப்பீடப் பேராயம் செபிக்கிறது.

எவ்வாறாயினும், பரிபூரணப் பலனை (நிறை பேறுபயன்) முழுவதுமாகப் பெறும் ஆன்மிக நிபந்தனைகளைப் பொறுத்தவரை, திருப்பீட மனச்சாட்சி பேராயம், 2020 மார்ச் 19 அன்று, "நோய்த் தொற்றின் இன்றையச் சூழலில் ஒப்புரவு அருளடையாளம் பற்றி" ஏற்கெனவே வெளியிட்ட குறிப்பில் உள்ள வழிமுறைகளுக்கு உதவுமாறு ஒவ்வொருவரும் நினைவூட்டப்படுகிறார்கள்.

இறுதியாக, நம்பிக்கையாளரின் பரிந்துரை வேண்டலினால் இறுதித் தூய்மையுறு நிலை ஆன்மாக்கள் உதவி பெறும் பொருட்டு, அதிலும் குறிப்பாக, கடவுளுக்கு மகிழ்ச்சியளிக்கும் பலிப்பீட பலியின் மூலம் இறந்த நம்பிக்கையாளர் அனைவர் நினைவு நாளான நவம்பர் 2–ஆம் தேதி "*Incruentum Altaris Sacrificium*" (10 ஆகஸ்டு, 1915) எனும் திருத்தூதுக் கொள்கை விளக்கத்தில் திருத்தந்தை 15–ஆம் பெனடிக்ட் சொல்வதுபோல ஒவ்வோர் அருள்பணியாளரும் மூன்று திருப்பலிகளை இந்நாளில் நிறைவேற்ற வலியுறுத்தப்படுகிறார்கள்.

எந்தவொரு மாறுபட்ட மனநிலை இருந்தபோதிலும், இந்த ஆணை இந்த நவம்பர் மாதம் முழுவதற்கும் செல்லும்.

திருப்பீட மனச்சாட்சி பேராயச் செயலகம், 2020 அக்டோபர் 22–ஆம் நாள், புனித இரண்டாம் ஜான் பால்: திருத்தந்தை நினைவு நாளன்று உரோமை நகரில் வழங்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட இந்த திருப்பீட ஆணையை தமிழக ஆயர் பேரவையின் திருவழிபாட்டுப் பணிக்குழு வழியாக ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் சென்றடைய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கிறிஸ்துவில் அன்பில்,

29–10–2020

ARCHDIOCESE CURIA PONDICHERRY & CUDDALORE

+A. Anandarayar

✠ **மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்**
*தலைவர், தமிழக ஆயர் பேரவையின் திருவழிபாட்டுப் பணிக்குழு*

Tel.: 0413 2334748(Off), 2342181 (Per), Fax: 0413 4201503
E-mail: archbishop@archdiocesepondicherry.com, dioceseofpondy@gmail.com
Web: www.pondicherryarchdiocese.org, www.archdiocesepondicherry.com